# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 15.05.2021 supeedsam.com supeedsam@gmail.com







# தமிழர்களை ஏமாற்றியதை போல் சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது



(ராஜ்)

இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியதை போல் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று இலங்கை அரசு நினைத்தால் அது மிகப் பெரும் தவறு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



களுவாஞ்சிக்குடி ஆதாரவைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ள கொவிட் தொற்றாளர்களுக்கான அவசரசிகிச்சைப்பிரிவிற்கு வழங்கவென முனைப்பு நிறுவனத்தினால் ஒரு மில்லியன் பெறுமதியான High Flow Nasal Cannula Oxygen Theraphy இயந்திரம் அரசாங்க அதிபர் ஊடாக மட்டு பிராந்திய சுகாதாரப்பணிப்பாளரிடம் கையளித்தபோது.

## களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் முதலாவது கோரோனா மரணம் பதிவு

(எருவில் துசி)

களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலையில் 81 வயதுடைய ஆண் ஒருவர் மரணமடைந்த நிலையில் அவருக்கு கொரனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

களுவாஞ்சிகுடி தேவாலய வீதியை சேர்ந்த 81 வயதுடைய நபர் இருமல் காரணமாக நேற்று காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை

02 ஆம் பக்கத்தில்...

## கல்முனை ஆதார வைத்தியசாலையில் முதலாவது கோவிட் மரணம்!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதாரவைத்தியசாலையில் முதலாவது கொவிட் மரணம் பதிவாகியுள்ளது.

கல்முனையையடுத்துள்ள மணல் சேனையைச்சேர்ந்த 85வயதுடைய மூதாட்டி திருமதி எஸ்.பூமணி என்பவரே இவ்விதம் அங்கு மரணமானவர்.

02 ஆம் பக்கத்தில்...

## கல்முனை மின்சார சபை விடுத்துள்ள அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசர திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம் பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மேலும் இரு வாரங்களுக்கு நீடித்தால் வைரஸ் பரவல் குறைவடையும்

(காந்தன்)

நாடளாவிய ரீதியில் பிறப்பிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடு மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்கப்படுமாயின் கொவிட் 19 வைரஸ் பரவல் குறைவடையும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு.மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கோரோனா தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பம்



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மாவட்ட்த்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்புக்கு 4 புதிய போலிஸ் நிலையங்கள்

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலதிகமாக புதிதாக 4 பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு இந்த மாத இறுதியில் உத்தியோக பூர்வமாக திறப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று

02 ஆம் பக்கத்தில்...






## வீதிகளில் வியாபாரத்தில் ஈடுபடுவோர் இன்று முதல் கைது மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அதிரடி அறிவிப்பு

(மட்டுநிருபர்)



வீதிகளில் வியாபாரம் செய்பவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## திருமலை குச்சவெளி கடற்கரையில் கரையொதுங்கிய பாரிய சுறா மீன்

(எப்.முபாரக்)



திருகோணமலை குச்சவெளி கடற்கரையில் பாரிய சுறா மீன் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று மாலை இம் சுறா மீனினம் கரையோதுங்கியதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். முந்நூறு கிலோவுக்கும் மேற்பட்ட சுறாமீனாக இருப்பதாகவும் நான்கு அடி நீளம் கொண்டதாக இருந்ததாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மணல் லோறிகள் எவ்வாறு அத்தியாவசிய சேவையானது? சாணக்கியன் கேள்வி



நாட்டில் அதி தீவிர பயணக்கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருக்கும் தற்காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பிற்கு வரும் வாகனங்களில் பெருமளவானவை மணல் ஏற்றும் லொறிகளாகும்.

02 ஆம் பக்கத்தில்...









## 'பயங்கரவாத தடைச்சட்டம்' ஐரோப்பிய ஒன்றியத்தின் குற்றச்சாட்டை மறுக்கும் அரசாங்கம்

(ராஜ்)

பயங்கரவாதத் தடைச் சட்டம் துஸ்பிரயோகம் செய்யப்படுவதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சுமத்தியிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் வெளிவிவகார அமைச்சர்

02 ஆம் பக்கத்தில்...







# மட்டக்களப்புக்கு 4 புதிய பொலிஸ்

வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் 12 பொலிஸ் நிலையங்கள் இயங்கிவரும் நிலையில் மேலும் புதிதாக 4 பொலிஸ் நிலையங்கள் அமைப்பதற்காக பொலிஸ் மா அதிபர் அனுமதி வழங்கியதையடுத்து வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள புணானை பொலிஸ் சோதனை சாவடியாக இயங்கிவரும் சோதனைச்சாவடி புணானை பொலிஸ் நிலையமும், ஏறாவூர் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள சந்திவெளி கேரக்காவெளிமடு பகுதில் சந்திவெளி பொலிஸ் நிலையமும், மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கொக்குவில் பொலிஸ் சோதனைச் சாவடியாக இயங்கிவரும் சோதனைச்சாவடி கொக்குவில் பொலிஸ் நிலையமும், காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கர்ப்பலா பிரதேசத்தில் கர்ப்பலா பொலிஸ் நிலையமுமாக 4 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இந்த அனுமதியையடுத்து அந்த பகுதிக்கு உதவி பொலிஸ்மா அதிபர். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சென்று இடங்களை பார்வையிட்டு அந்த பகுதிகளில் பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பொலிஸ் பிரிவு எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு அதற்கான சகல நடவடிக்கைககளும் எடுக்கப்பட்டு தற்காலிகமாக கடமைகள் இயங்க ஆரம்பித்துள்ளதுடன் இந்த மாதக் கடைசியில் சம்பிராய பூர்வமாக பொலிஸ் நிலையம் திறப்பதற்காக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# கல்முனை மின்சார சபை விடுத்துள்ள அறிவிப்பு

இன்று செவ்வாய்க்கிழமை நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட வெளவாலோடை, திராய்க்கேணி, அம்பாறை வீதி, ஹிலால்புரம், வங்கலாவடி, ஹிஜ்ராபுரம் வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளைபுதன்கிழமை (16) நிந்தவூர்மின்பாவனையாளர்சேவை நிலையத்திற்குட்பட்ட நிந்தவூர்02ம் குறுக்கு தெரு பகுதியில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

வியாழக்கிழமை (17) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நிந்தவூர் முஸ்தபாபுரம் பகுதியில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

சனிக்கிழமை (19) கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர் ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட தரவைக்கோவில், அம்மன்கோவில், பீச் வீதி, இஸ்லாமாவாத் வீட்டுத்திட்டம், உடையார் வீதி, கடற்கரைப்பள்ளி, வீவீ வீதி, வொலிவேரியன், கல்முனைக்குடி, ஒலுவில் கிராமம், நிந்தவூர், அட்டாளைச்சேனை, பாலமுனை, காரைதீவு ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

செவ்வாய்க்கிழமை (22) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நிந்தவூர், வெளவாலோடை, திராய்க்கேணி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

புதன்கிழமை (23) கல்முனை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட வைத்தியசாலை வீதி, மணல்சேனை, பாண்டிருப்பு, மருதமுனை, துறைவந்தியமடு, பெரிய நீலாவனை ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

வியாழக்கிழமை (24) கல்முனை மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நாவிதன்வெளி, அண்ணாமலை ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

சனிக்கிழமை (26) நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நிந்தவூர் 02ம் குறுக்குத்தெரு, அட்டாளைச்சேனை கோணவத்தை, ஜீ.ரீ.சி. தெற்கு, திராய்க்கேணி, சின்னப்பாலமுனை, சம்மாந்துறை அம்பாறை வீதி, ஹிலால்புரம், வங்கலாவடி, ஹிஜ்ராபுரம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும் மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை (29) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நிந்தவூர், வெளவாலோடை, திராய்க்கேணி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படும்.

புதன்கிழமை (30) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட ஒலுவில் கிராம் பகுதியில் காலை 08.30 மணி முதல் மாலை 05.00 மணி வரையும், மின் தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில்

அவர் தனக்கேற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக இறுதிநேரத்தில் வைத்தியசாலைக்கு வந்துள்ளார். அவருக்கு வாயிலில் அன்ரிஜன் செய்ததும் தொற்று உறுதிசெய்யப்பட்டது. உடனே அங்குள்ள கொவிட் சிகிச்சை அதிதிவீர பிரிவில் அனுமதித்தனர். அங்கு கொண்டுசென்று சோதனை செய்ய ஆரம்பித்ததும் அவரது உயிர் பிரிந்தது.

பின்னர் அவரிருந்த கட்டிலை சுத்தம் செய்து அம்புலன்ஸ் சுத்தமாக்கப்பட்டடு அம்பாறை பிரேதஎரிப்புநிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

குறித்த கொவிட் சிகிச்சை பிரிவு 10கட்டில்களுடன் திறம்பட இயங்கிவருவதும் அருகிலுள்ள மருதமுனை கொவிட் இடைத்தங்கல் நிலையத்தில் சடுதியாக சிகிச்சைக்கான தேவை ஏற்படுமிடத்து அவர்களை அனுமதித்து சுகதேகியாக்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரனம் இந்த முதலாவது மரணம் பற்றிக் கேட்டபோது;

இதுவரை காலமும் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெறவில்லை. பலர் நோய் முற்றும்வரை வீடுகளில் இருந்துவிட்டு இறுதிநேரத்தில் வருவதால் இத்தகைய துர்மரணங்கள் அநாவசியமாக ஏற்படுகின்றன. எனவே யாராவது குணங்குறிகள் தென்பட்டால் எந்தவயதுப்பிரிவினராகஇருந்தாலும் உடடியொக வைத்தியசாலையை நாடவேண்டியது கட்டாயமாகும் என்றார்.






# களுவாஞ்சிகுடி ஆதார

காலமானார். மரணமடைந்தவருக்கு அண்டியன் பரிசோதனை மேற்கொண்ட போது அவருக்கு கொரேனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 97 நபர்களுக்கு கொரனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அடிப்படையில மட்டக்களப்பில் 11, களுவாஞ்சிக்குடியில் 3, வாழைச்சேனை 8, காத்தான்குடி 11, ஓட்டமாவடி 1, கோரளைப்பற்று மத்தி 11, செஙகலடி 1, ஏறாவூர் 26, வாகரை 2, பட்டிப்பளை 5, வெல்லாவெளி 8, ஆரையம்பதி 9, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் என பதிவாகியுள்ளதாகவும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி நா.மயூரன் தெரிவித்தார்.

# 'பயங்கரவாத தடைச்சட்டம்' ஐரோப்பிய

தினேஸ் குணவர்தன இந்தக் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் கடந்த 10ம் திகதி இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருத்தமளிப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். கொடிய பயங்கரவாதம் தலைதூக்கிய காரணத்தினால் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்சில விடயங்களை திருத்தி அமைப்தபற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் ஐக்கிய ஒன்றியத்திற்கு வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு.மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு

திங்கட் கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முன்னுரிமைக்கு அமைய மட்டக்களப்பு பொது சுகாதார வைத்திய மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கான தேவைப்பாடுகள் குறித்த விளக்கங்கள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

சுகாதாரப் பிரிவில் 250 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

# மேலும் இரு வாரங்களுக்கு நீடித்தால் வைரஸ் பரவல்

கடந்த மூன்று மாதங்களில் மிக வேகமாக கொவிட் 19 வைரஸ் தொற்று பரவியது. எனினும் பயணக்கட்டுப்பாடு பிறப்பிக்கப்பட்ட பின்னர் வைரஸ் பரவல் வீதம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.

மரணங்கள் அதிகரிக்க கடந்த கால மோசமான செயற்பாடுகளே காரணமாகும். ஆகவே இப்போது கையாளப்படும் கட்டுப்பாட்டு நிலைமையை தொடர்ந்து இரு வாரங்கள் நீடித்தால் நிச்சயமாக வைரஸ் தொற்றுப்பரவல் குறைவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப்படுகின்றது என்பதை நாம் அவதானிக்கின்றோம். அதிக அச்சுறுத்தல் பகுதிகள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மக்களுக்கு விரைவாக தடுப்பூசிகள் ஏற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமானால் அடுத்த கட்டத்தில் நாட்டில் வைரஸ் பரவலை கையாள்வது இலகுவாக அமையும் எனக் கூறியுள்ளார்.

# மணல் லொறிகள் எவ்வாறு அத்தியாவசிய சேவையானது?

அவை எவ்வாறு அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டன என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை இராணுவத்தின் மூலம் இந்தத் தொற்று நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று ஜனாதிபதியும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் நம்பியதிலிருந்துதான் தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தோல்வியடைய ஆரம்பித்தன என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுடனான நெருக்கடி நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான குழுக்கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

இக்காலப்பகுதியில் இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு உதவக்கூடிய பல்வேறு புதிய நடவடிக்கைகளையும் திட்டங்களையும் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இளைஞர், யுவதிகள் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

ஆனால் இராணுவத்தின் மூலம் இந்தத் தொற்றுநோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று ஜனாதிபதியும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் நம்பியதிலிருந்துதான் தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தோல்வியடைய ஆரம்பித்தன.

வைரஸ் பரவலை ஒருபோதும் துப்பாக்கியைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்த முடியாது. மாறாக அதற்கேற்றவாறான செயற்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பத்திலிருந்தே பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ளல், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான உணவுப்பொருள் வழங்கல், தடுப்பூசி வழங்கல் உள்ளடங்கலாக அனைத்து விடயங்களையும் அரசாங்கம் முறையாகத் திட்டமிடவோ, நிர்வகிக்கவோ இல்லை. இவ்வனைத்து விடயங்களிலும் அதிகளவான அரசியல் தலையீடுகளும் ஊழலுமே காணப்பட்டன.

நாட்டில் அதிதீவிர பயணக்கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருக்கும் தற்காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பிற்கு வரும் வாகனங்களில் பெருமளவானவை மணல் ஏற்றும் லொறிகளாகும்.

அவை எவ்வாறு அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டன என்பது புரியவில்லை. அதேபோன்று மணல் அகழும் பகுதியில் சுமார் நூற்றுக்கணக்கான லொறிகள் நிறுத்தப்பட்டிருப்பதுடன் அவை மணலை ஏற்றிக்கொண்டு நாட்டில் பலபாகங்களுக்கும் செல்கின்றன. வங்கிச்சேவை அத்தியாவசிய சேவையாக இருக்கும் நிலையிலும் கூட, மட்டக்களப்பு மாவட்டத்தில் வங்கி ஊழியர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்கு மறுப்புத்தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பிள்ளையான் என அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவருக்கு நெருக்கமானவர்களுக்குத் தடுப்பூசியை வழங்குமாறு கடிதங்களைக் கொடுத்திருக்கிறார்.

அவ்வாறிருக்கையில் அதுகுறித்து ஆராயாமல் அத்தியவாசிய சேவையில் பணியாற்றுவோருக்கு தடுப்பூசியை வழங்க மறுப்புத்தெரிவிப்பது ஏன்? ஆகவே கொவிட் 19 கட்டுப்பாட்டைப் பொறுத்தவரையில் அனைத்து விடயங்களிலும் அரசாங்கம் தோல்வியடைந்திருக்கிறது என்றே கூறவேண்டும்.






# வீதிகளில் வியாபாரத்தில் ஈடுபடுவோர் இன்று முதல் கைது

அதிகளவான மரக்கறி வியாபாரிகளும் மீன்வியாபாரிகளும் பழ வியாபாரிகளும் வீதிகளில் பொருட்களை விற்பனை செய்கின்றனர். இவ்வாறானவர்களை இன்று செவ்வாய்க்கிழமை முதல் கைது செய்தற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட கொவிட் செயலணியின் கூட்டம் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட கொவிட் செயலணிக்கு பொறுப்பான இராணுவ அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் திணைக்களங்களின் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட கொவிட் செயலணியின் கூட்டத்தில் விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டு ஊடகங்கள் ஊடாக மாவட்ட அரசாங்க அதிபரினால் அறிவிக்கப்பட்டது. ஓட்டமாவடி, ஏறாவூர் பகுதிகளில் அண்மையில் தனிமைப்படுத்தப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் பொதுமக்கள் விழிப்புக்குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு போதுமானளவு பொலிஸார் இல்லையென்ற கருத்து குறித்த பகுதிகளின் பிரதேச செயலாளர்களினால் முன்வைக்கப்பட்டது.

இதன்போது அப்பகுதிக்கு மேலதிக பொலிஸாரை அனுப்புவதற்கு மட்டக்களப்பு மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் நடவடிக்கையெடுப்பதாக தெரிவித்தார்.

அதிகளவான மரக்கறி வியாபாரிகளும் மீன்வியாபாரிகளும் பழ வியாபாரிகளும் வீதிகளில் பொருட்களை விற்பனை செய்வதாக ஜனாதிபதியினால் கொவிட் செயலணிக்கு நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் கொஸ்வதவினால் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் அந்ததந்த பகுதி உள்ளுராட்சிமன்ற தலைவர்களினால் நடவடிக்கையெடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

அவ்வாறானவர்களை இன்று தொடக்கம் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். வீதிகளில் வியாபாரம் செய்வதை உடனடியாக நிறுத்தி அந்த பொருட்களை நடமாடும் சேவையாக விற்பனை செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில் பலர் அலுவலக அடையாள அட்டையினைக்காட்டி வீதிகளுக்கு வருவதாக பொலிஸார், இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

# தமிழர்களை ஏமாற்றியதை போல் சர்வதேசத்தை ஏமாற்ற

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் பேசுகையில்; இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து ஐரோப்பிய நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை வரவேற்கின்றோம்.

தமிழ் மக்கள் நலனில் அக்கறைகொண்ட சர்வதேச சமூகம், இலங்கை மீது பல பரிந்துரைகளை முன்வைத்து பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இதன்போது பல வாக்குறுதிகளையும் இலங்கை அரசிடமிருந்து சர்வதேசம் பெற்றுள்ளது. இதை இந்தியா செய்திருக்கின்றது, ஐரோப்பிய ஒன்றியம் செய்திருக்கின்றது, ஐ.நா. சபை செய்திருக்கின்றது, அமெரிக்கா செய்திருக்கின்றது. இவ்வாறு பல நாடுகளும், நிறுவனங்களும் இலங்கை அரசிடமிருந்து பல்வேறு வாக்குறுதிகளைப் பெற்றுள்ளன.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்குப் பல நாடுகளாலும், நிறுவனங்களாலும் போதிய கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசு, இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியதைப் போல் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றலாம் என்று நினைத்தால் அது பெரும் தவறு. இன்று சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாத இக்கட்டான நிலையிலேயே இலங்கை அரசு உள்ளது எனவும் சம்பந்தன் கூறினார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு போதியளவு உதவிகளை சர்வதேச சமூகம் வழங்கியிருந்தது. அதன்போது தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்ற வாக்குறுதியை சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு வழங்கியிருந்தது.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான கருமங்களை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். தவறினால் நிலைமைகள் போகப் போக இன்னும் மோசமடையும். பலவிதமான தடைகள் இலங்கை மீது விதிக்கப்படலாம். அதாவது பயணத்தடை, பொருளாதாரத்தடை, மனித உரிமைகள் சம்பந்தமான தடைகள் எனப் பல தடைகள் வரலாம்.

எனவே, தான்தோன்றித்தனமாகச் செயற்படும் இலங்கை அரசு, தனது தற்போதைய நிலைப்பாட்டிலிருந்து மாற வேண்டியது மிகவும் அத்தியாவசியம். மாறாவிட்டால் அரசின் எதிர்காலமும் நாட்டின் எதிர்காலமும் சாத்தியமாக அமையாது எனவும் சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.




SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...


மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி


Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

Aaran Ayurveda
& Wellness Massage

Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

உதயகுமார் கல்வி நிலையம்

முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா -வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# ‘மண் அகழ்வில் ஈடுபட்ட இடத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டமை கண்டிக்கத்தக்கது’



(எப்.முபாரக்)

திருகோணமலை இலுப்பைக்குளம் மற்றும் பெரிய குளம் பகுதியில் மாவட்ட செயலாளரின் உத்தரவையும் மீறி மண் அகழ்வில் ஈடுபட்ட இடத்தில் செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்மையை வன்மையாக கண்டிப்பதாக மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மண் அகழ்வுக்காக அனுமதி வழங்கும் அரசாங்கம் அதனை கண்காணிக்க தவறுவதன் காரணமாக அதில் துஸ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இதனால் அனுமதிக்கு மேலதிகமான மண் அகழப்பட்டு இயற்கை வளம் பாதிக்கப்படுவது மட்டுமல்லாது பொதுமக்களும் பாதிப்புக்குள்ளாகும் நிலையும் உருவாகின்றது.

மண் அகழ்வின் போது கடைப்பிடிக்க வேண்டிய நியமங்களும் முறைகளும் உரிய முறையில் கடைப்பிடிக்காததன் காரணமாக மண் அகழப்படுகின்ற இடங்கள் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற அபாயங்களுக்குரிய இடங்களாகவும் மாற்றப்படுகின்றன. இதனால் அதனைச் சூழ வாழ்கின்ற மக்களுக்கும், விலங்குகளுக்கும் இது அச்சுறுத்தலாக அமைகின்றது.

இதனை அதற்கு பொறுப்பான அதிகாரிகள் கவனித்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதன் பொறுப்பு ஊடகத்திற்கும் இருக்கின்றது. அந்த வகையில் திருகோணமலை இலுப்பைக்குளம் மற்றும் பெரியகுளம் பகுதியில் இடம்பெற்று வரும் மண் அகழ்வை மறு அறிவித்தல்வரை நிறுத்துமாறு 11.06.2021 அன்று வெள்ளிக்கிழமை அன்று சம்பவ இடத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த மாவட்ட செயலாளர் பணித்திருந்தார்.

எனினும் 12.06.2021 அன்று சனிக்கிழமை அப்பகுதிகளில் மாவட்ட செயலாளரின் உத்தரவையும் மீறி மண் அகழ்வு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இந்த செய்தியை சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மண் அகழ்வில் ஈடுபட்டவர்களால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார். இதனை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகத்துறை பார்க்கப்படுகின்றது அந்தவகையில் ஊடகவியலாளர் சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும் இதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாத வண்ணம் அரசு நடவடிக்கை எடுப்பதோடு மண் அகழ்வுகளுக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிகளை சம்பந்தப்பட்ட இடங்களையும் பார்வையிட்டு மீழ்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# ‘மக்களின் ஒத்துழைப்பின்மையால் கல்முனை ஆபத்தை சந்திக்கும் நிலையில்’

(நூருல் ஹுதா உமர்)



கொரோனா வைரசுக்கு இனம், மதம், குலம், பிரதேசம் என்ற எந்த பாகுபாடும் தெரியாது. சுகாதார வழிமுறைகளை பேணாத யாராக இருந்தாலும் அது தாக்கும். இதனாலையே தான் நாட்டில் எவ்வித பாரபட்சமுமின்றி பயணத்தடை அமுலாக்கப்பட்டுள்ளது. ஆனால் மக்கள் எவ்வித மரண பயமுமின்றி அன்றாடம் வாழ்வது போன்றே இன்றைய நாட்களிலும் வாழ்வது எம் எல்லோருக்கும் ஆபத்தை உண்டாக்கும் என கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

நேற்று மாலை கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர், கல்முனை மாநகரத்தின் பெரிய நீலாவணை தொடக்கம் மாளிகைக்காடு ஆரம்ப எல்லை வரை மறுபக்கம் சவளக்கடை ஆரம்ப எல்லை வரை மக்கள் வழமை போன்று தங்களின் அன்றாட நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். இதனால் நீண்டகால நோயாளிகள், அத்தியாவசிய தேவைகளுக்கு வெளியில் வருவோர் என பலரும் பாதிக்கப்படுகின்றனர். போதாக்குறைக்கு திருமண வைபகங்கள், பிறந்தநாள் நிகழ்வுகள், மரண வீடுகளில் கூட நூற்றுக்கணக்கானோர் கூடுவது இப்போதை சூழ்நிலையில் ஆபத்தானதாக அமைந்துள்ளது.

சுகாதார துறையினரும், பாதுகாப்பு படையினரும் தமது குடும்பங்களை மறந்து விடுமுறைகள் கூட இல்லாமல் கடுமையாக இந்த பெருந்தொற்றை எதிர்த்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கல்முனை மக்கள் சார்பில் இந்த நேரத்தில் நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். ஆனால் துரதிஷ்டவசமாக மக்கள் தங்களின் ஒத்துழைப்புக்களை வழங்காது செயற்பட்டு வருவது கவலையளிக்கிறது. முக்கிய தேவைகளுக்காக வழங்கப்பட்ட அனுமதிகளையும் சிலர் முறைகேடாக பயன்படுத்துவது கவலையான விடயமாகும். நாட்டில் வேகமாக பரவும் இந்த கொரோனா மூன்றாம் அலை கல்முனை பிராந்தியத்தில் தன்னுடைய வேகத்தை சமீபத்தைய நாட்களில் கூட்ட ஆரம்பித்துள்ளது தெளிவாகிறது.

உயிராபத்து நிறைந்த இந்த காலகட்டத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி எல்லோரும் வீட்டில் அமைதியாக இருந்து இறைவனை பிரார்த்திக்க வேண்டும். அப்படியில்லாது சுகாதார விதிமுறைகளை மீறி நடப்போருக்கு கடுமையான முறையில் சட்ட நடவடிக்கை எடுக்க சுகாதார துறையினரும், பாதுகாப்பு தரப்பினரும் முன்வரவேண்டும். சட்டத்தை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அரசியல் தலையீடுகளோ அல்லது அதிகார அழுத்தங்களோ இல்லாது சுதந்திரமாக கடமையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என மேலும் கேட்டுக் கொண்டார்.

# வறுமை கோட்டுக்குள் வாழும் குடும்பங்களுக்கு மன்னார் பொலிஸார் உலர் உணவு பொதிகள் விநியோகம்



(வாஸ் கூஞ்ஞ)

கொரோனா தொற்று பரவல் காரணமாக நாட்டில் அமுலாக்கப்பட்டுவரும் பயணத்தடை மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருப்பது போன்ற நாளாந்த மக்களின் இயல்பு வாழ்க்கைள் ஸ்தம்பிதம் அடைந்திருக்கும் இந்த வேளையில் மன்னார் பொலிசார் மிகவும் வறுமைக் கோட்டுக்குள் வாழும் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு திங்கள்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்திலும் பேசாலை பொலிஸ் நிலையத்திலும் இடம்பெற்றது.

வட மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டலுக்கு அமைவாக மன்னார் மாவட்டத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டுல்ல வீரசிங்க மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராட்ச்சி ஆகியோரின் தலைமையில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் ஜெயதிலகவின் உதவியுடனும் மற்றும் பேசாலை பொலிஸ் நிலையத்தில் பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமஜீத் உதவியுடனும் இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மன்னார் பொலிஸ் நிலையப் பகுதியிலும் பேசாலை பொலிஸ் நிலையப் பகுதியிலும் தெரிவுசெய்யப்பட்ட மிகவும் வறுமைக் கோட்டுக்குள் வாழும் சுமார் நாற்பது குடும்பங்களுக்கு இவ் அத்தியாவசிய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

# மட்டக்களப்பில் வெவ்வேறு இடங்களில் இரண்டு யானைகள் உயிரிழப்பு

(க.ருத்திரன்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் வெளவ்வேறு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை 2 காட்டு யானைகள் உயிரிழந்த நிலையில் அவற்றின் சடலங்கள் மீட்க்கப்பட்டுள்ளதாக பிரதேச பொலிசார் தெரிவித்தனர்.

வாகரை பொலிஸ் பிரிவின் கதிரவெளி வயல் பிரதேசத்திலும் மற்றையது ஏறாவூர் பொலிஸ் பிரிவின் கரடியனாறு கித்துள் பிரதேசத்திலும் இவ் யானைகளின சடலங்கள் மீட்க்கப்பட்டுள்ளது.

கிரான் பிரதேச வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று உடற் கூற்றாய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் அவற்றினை அடக்கம் செய்துள்ளனர்.அவை இறந்தமைக்கான காரணத்தினை கண்டறிவதற்காக அவற்றின் மாதிரிகளை உடற் கூற்றாய்விற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

# வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி அமைப்பு உலர் உணவு விநியோகம்

(க.ருத்திரன்)



நாட்டில் முடக்கல் நிலை ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு துன்பத்திற்குள்ளாகியுள்ள மக்களுக்கான உலர் உணவு விநியோகம் செய்யும் நடவடிக்கை கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வெளிச்சம் வாழ்வியல் வளர்ச்சி கனடா புலம்பெயர் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டது.

கிரான் பறங்கியாமடு மீனவர் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு இவ்வுலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

நவா,மற்றும் சி.தேவா அகியோர்களது ஒழுங்கமைப்பின் ஊடாக கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர். எஸ்.ராஜ்பாவு.வை.மங்கள தர்ஷன் ஆசிரியர் ஆகியோர்கள் இதனை மக்களுக்கு வழங்கி வைத்தனர்.

# இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட 238 கிலோகிராம் கேரளா கஞ்சா மீட்பு

வடமராட்சி நிருபர்

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட 238 கிலோ கிராம் கேரளா கஞ்சா கடற்படையினரினால் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படை தளத்தை சேர்ந்த கடற்படையினர் நேற்று திங்கட்கிழமை அதிகாலை வடக்கு கடற்பரப்பில் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகு ஒன்றினை கடற்படையினர் மறிக்க முற்பட்டபோது அதில் இருந்தவர்கள் சில பொதிகளை கடலில் வீசியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து படகினை முற்றுகையிட்ட கடற்படையினர் அதனைச் சோதனை செய்த போது அதற்குள் கேரளா கஞ்சா அடங்கிய பொதிகள் காணப்பட்டன. இதனையடுத்து கடற்படையினர் படகில் வந்த பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த இருவர் மற்றும் அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த ஒருவருமாக மூவரைக் கைது செய்தனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது கஞ்சா பொதிகள் கடலில் வீசியதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடல் பகுதியில் தேடுதல் நடத்தியபோது சில பொதிகள் மீட்க்கப்பட்டன. மீட்கப்பட்ட பொதிகளில் 238 கிலோ கிராம் கஞ்சா காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.கைது செய்யப்பட்ட மூவரும் காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு கொண்டு சென்றுள்ளதாக கடற்படை வட்டாரத்தினர் தகவல் தெரிவித்தனர்.






# கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசம் பாரிய சவால்களை எதிர் நோக்குகிறது

## பிரதேச சபை உறுப்பினர் ஹாமித் சிறாஜி



**( எச்.எம்.எம்.பர்ஸான்)**

கொரோனா தொற்று அதிகரித்து வரும் இந்நிலையில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேசம் பாரிய சவால்களை எதிர் நோக்கி வருகிறது என்று ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.ஹாமித் சிறாஜி தெரிவித்தார்.

கொரோனா தொற்றின் மூன்றாவது அலையானது நாட்டில் பல்வேறு தாக்கங்களை செலுத்தியுள்ள போது, அது ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவையும் தாக்கியுள்ளது.

இதன் காரணமாக ஏராளமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இதுவரை இரண்டு மரணங்களும் சம்பவித்துள்ளன.

கொரோனா தொற்று காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் மரணிக்கின்ற நபர்களின் உடல்கள் ஓட்டமாவடி - மஜ்மா நகர் பகுதியிலே அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அதேபோன்று குறித்த பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் இம்முறையும் அதிகரித்து வரும் நிலை காணப்படுகிறது.

ஓட்டமாவடி பிரதேசம் கடந்த ஆண்டு டெங்கு நோய் தாக்கத்துக்குள்ளான பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்தனை விடயங்களையும் சுகாதார வைத்திய அதிகாரியும், பொதுச் சுகாதார பரிசோதகர்களும் கையாள வேண்டியுள்ளதால் இவ் அசாதாரண சூழ்நிலையில் பிரதேசத்தின் மேலதிக விடயங்களை முன்னெடுத்துச் செல்வதில் பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன், குறித்த சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை கிழக்கு, மேற்கு மற்றும் மாஞ்சோலை ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதால் அனைத்து விடயங்களையும் சுகாதாரப் பிரிவினர்கள் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே, ஓட்டமாவடி பிரதேச மக்களின் நலன் கருதியும், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பணிகளை இலகுபடுத்தவும் இவ்விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தி குறித்த பகுதிக்கு இன்னுமோர் சுகாதார வைத்திய அதிகாரியையும் மேலதிக பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சுகாதார ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்.

இவ்விடையம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன் என்று பிரதேச சபை உறுப்பினர் எம்.ஐ.ஹாமித் சிறாஜி தெரிவித்தார்.

# திருக்கோவிலில் உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு



**(திருக்கோவில் நிருபர்)**

நாட்டில் நடைமுறையில் உள்ள பயணத்தடை காரணமாக அம்பாரை திருக்கோவில் பிரதேசத்தில் தினக்கூலி வறுமானத்தை இழந்த குடும்பங்களுக்கு திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் மனிதாபிமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

இவ் உலர் உணவுப் பொதிகள் திருக்கோவில் பிரதேச செயலாளரின் கோரிக்கைக்கு இனங்க பொது அமைப்புக்கள் மற்றும் தனியாரின் நிதி பங்களிப்புடன் திருக்கோவில் பிரதேசத்தில் தொடர்ந்தும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் திருக்கோவில் பிரதேசத்தில் மீள் குடியேற்ற கிராமங்களான தாண்டியடி தங்கவேலாயுதபுரம் மற்றும் கஞ்சிகுடிச்சாறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மிக வறிய தினக்கூலி குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டு இருந்தன.

இவ் உலர் உணவுப் பொதிகளை அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கொவிட் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வீடு வீடாச் சென்று வழங்கி வைத்திருந்தனர்.

# மல்வத்தை பிரதேசத்தில் உலருணவு நிவாரண பொருட்கள் வழங்கிவைப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**





அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய மல்வத்தைப் பிரதேசத்தில் சமகால கொவிட் தாக்கத்தினாலும் பயணத்தடையினாலும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தையிழந்த ஒரு தொகுதி விதவைகளுக்கு உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

தொடரும் பயணத் தடை மற்றும் கொரோனா காரணமாக பாதிக்கப்பட்ட தாயகஉறவுகளின் பசியைப்போக்க தனது பிறந்த நாள்பரிசாக 10லட்சரு பாவை வழங்கியுள்ளார் ஒரு பரோபகாரி. அவர்தான் இலங்கையைச்சேர்ந்த கனடாவில் வாழ்ந்துவரும் மனோகரன் சுப்பிரமணியம் என்பார்.

குறிப்பாக அவர்வழங்கிய 1மில்லியன் ருபா(10லட்சருபா) நிதியைஅம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 500 குடும்பங்களுக்கு தலா 2000 ருபா வீதம் 500 உலருணவு நிவாரணப்பொதிகளை வழங்கி உதவுமாறு மாவட்டத்தின் பிரபல சமுக செயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலிடம் கேட்டுக்கொண்டிருந்தார்.

அதற்கிணங்க மல்வத்தைப் பிரதேசத்திலுள்ள மல்லிகைத்தீவு திருவள்ளுவர்புரம் கணபதிபுரம் புதுநகர் ஆகிய கிராம விதவைகளுக்கென உலருணவு நிவாரணப்பொதிகளை சமுகசேவையாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் 150 உலருணவுப் பொதிகளை நேற்று வழங்கிவைத்தார்.

நிகழ்வில் சமுகசெயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்துகொண்டனர்.அங்குள்ள இளைஞர்கள் ஆர்வத்துடன் இப்பணிக்கு ஒத்துழைத்தனர்.

பயனாளிகள் கருத்துரைக்கையில் கனடாவில் வதியும் மனோகரன்சுப்பிரமணியத்திற்கு நீண்டஆயுள்கிடைக்கவேண்டுமென பிறந்தநாள் வாழ்த்தும் நன்றியும் தெரிவிக்கின்றஅதே வேளை அதனை இங்கு பெற்றுத்தந்த தவிசாளர் ஜெயசிறில் ஜயாவுக்கும் நன்றிகள் என்று கூறினர்.

# திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் இரண்டாம் கட்டமாக பெண்களுக்கான சுகாதார பொதிகள் கிண்ணியாவில் வழங்கி வைப்பு



**(இஃஜாஸ்.ஏ.பரீட் )**

அவுஸ்ரேலியாவை தளமாகக் கொண்டு இயங்கும் தொண்டு நிறுவனமான வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் நிதி அனுசரணையில் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் பெண்களுக்கான சுகாதார பாதுகாப்பு தொகுதிகள் இரண்டாம் கட்டமாக கிண்ணியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப் பொதிகள் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி அவர்களிடம் மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாா ிசினால் பிரதேசசெயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

கிண்ணியாப் பிரதேசத்தில் கோவிட்-19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களில் உள்ள பெண்களின் சுகாதார தேவையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் மக்ள் சேவை மன்றத்தினால் 500 பெண்களுக்கான சுகாதாரப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டு அவை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஊடாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். எஸ். றியாத், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் பீ. நிஜாம்தீன், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசபை உபதவிசாளர் ஏ. எல்.எம் நௌபர், கின் டீவி இயக்குநர் நளிஜ் அப்துல் சலாம் அதன் முகாமையாளர் எம். சப்ரி, மக்கள் சேவை மன்றத்தின் திட்ட உத்தியோகத்தர் ஆர். கிரிஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் அசவரகால நிவாரணத் திட்டத்தின் வழங்கப்பட்ட இந்த நிகழ்வுக்கு கின் டீவி ஊடக அனுசரணை வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

# காரைதீவில் 4 பாடசாலைகளில் தடுப்பூசி போட திட்டம்!

## காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி நடவடிக்கை



**(வி.ரி.சகாதேவராஜா)**

கொவிட் தடுப்பு சினோபார்ம் தடுப்பூசி போடும் திட்டத்திற்கு தயார்படுத்துமுகமாக காரைதீவு பிரிவில் நான்கு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தயார்படுத்தப்பட்டு வருவதாக காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஸீர் தெரிவித்தார்.

காரைதீவு இ.கி.மி.பெண்கள் பாடசாலை காரைதீவு சண்முகா மகாவித்தியாலயம் மாவடிப்பள்ளி அஸ்ரப் மகாவித்தியாலயம் மாளிகைக்காடு அல்ஹுசைன் வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவிருக்கிறது.

இதற்கு முன்னோடியாக பிரதேசத்தில் களத்தில் பணியாற்றும் முன்னணிக்களப்பணியாளர்கள் மற்றும் 60வயதுக்கு மேற்பட்டோரில் ஊசி செலுத்த விருப்பத்துக்குரியவர்களின் பெயர் விபரம் தயாரிக்கப்பட்டுவருகிறது.முமுன்னதாக சண்முகா மகாவித்தியாலயத்திலும் அடுத்து மாவடிப்பள்ளி மாளிகைக்காடு பிரதேசத்திலும் இறுதியாக இ.கி.மி.பெண்கள் பாடசாலையிலும் தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காரைதீவுப்பிரதேசத்திற்க 2000தடுப்பூசிகள் அளவில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் கல்முனைப்பிராந்தியத்திற்கென தடுப்பூசி கிடைக்கப்பெற்றதும் காரைதீவிலும் குறித்த ஊசிகள் செலுத்தப்படும் என அவர் மேலும் கூறினார்.

# வீதிகள் சமிஞ்ஞைகள் புனரமைப்பு செய்யும் செயற்பாடு முன்னெடுப்பு

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை காரைதீவு சம்மாந்துறை உள்ள வீதிகள் சமிஞ்சைகள் புனரமைப்பு செய்யும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ள விபத்துக்கள் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முகமாகவும் பாதசாரிகளின் நலன் கருதி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



எனவே இப்பகுதியினூடாக பயணம் செய்பவர்களை மிக அவதானத்துடன் செல்லுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை எச்சரிக்கை பாதாதை மூலமாக அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும் கொரோனா 3 அனர்த்தம் கல்முனை பிராந்தியத்தில் அச்சுறுத்தலை மேற்கொண்டுள்ள நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இவ்வாறான செயற்பாட்டினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.மேலும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனமும் தொழிநுட்ப ரீதியாகவும் இச்செயற்பாட்டிற்கு உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

# விசேட தேவையுடையவர்களுக்கு 5000 ரூபா கொடுப்பனவு

**(வி.சுகிர்தகுமார்)**



நாட்டில் பயணத்தடை உள்ளபோதும் மக்களுக்கான நிவாரணப்பணிகள் அரசாங்கத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் பல்வேறு கொடுப்பனவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 222 விசேட தேவையுடையவர்களுக்கான 5000 ரூபா கொடுப்பனவு மற்றும் பொது சன மாதாந்த உதவிப்பணம் வழங்கும் நடவடிக்கைகள் தொடராக இடம்பெறுகின்றன.

கிராம உத்தியோகத்தர்கள் கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு சென்று இப்பணத்தொகையினை வழங்கி வைத்து வருகின்றனர்.

பணத்தை பெறுகின்ற மக்களும் வழங்கும் கிராம உத்தியோகத்தர்களும்சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் சமுர்த்தி மூலமான கொடுப்பனவின் முதற்கட்டம் நிறைவுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லீம் மக்களுக்கு விரோதமாக நடந்தவர்கள் தமிழ் இனவாதிகள் என கூறிய கலையரசன் எம்.பிக்கு பாராட்டு

(பாறுக் ஷிஹான்)

முஸ்லீம் மக்களுக்கு விரோதமாக நடந்தவர்கள் தமிழ் இனவாதிகள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் கூறியிருப்பதை பாராட்டுவதாக உலமா கட்சி தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள உலமா கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்;

முஸ்லீம் தமிழ் கட்சிகளின் பொதுவான போக்கு தேர்தலுக்கு பின்னர் ஒரு பேச்சு.அதற்கு முன்னர் ஒரு பேச்சு.தேர்தலுக்கு முன்னர் முஸ்லீம் காங்கிரஸ் தரப்பில் தமிழரா என எதிர்ப்பது மற்றும் தமிழர் தரப்பில் முஸ்லீமா என எதிர்ப்பதே தொடர்கதையாகிறது.இதன் பின்னர் தேர்தலின் பின்னர் தமிழ் முஸ்லீம் கட்சிகள் வேறொன்றை பேசுவதை வழமையாக பார்க்கின்றோம்.இந்த வகையில் அந்த காலத்தில் கலையரசன் எம்.பி போன்றவர்கள் முஸ்லீம் மக்களுக்கு விரோதமாக நடந்தவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.முஸ்லீம்களுக்கு எதிராக இனவாதம் பேசியவர்களில் கலையரசன் என்பவரும் ஒருவராவார்.

தமிழ் பிரதேச செயலகத்தை பிரிந்து முஸ்லீம் பிரதேச செயலகம் வேறாகவும் தமிழ் பிரதேச செயலகம் வேறாகவும் வர வேண்டும் என கூறியவரும் கலையரசன் ஆவார். இவர் தற்போது கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினைகளின் முக்கிய காரணம் தமிழ் இனவாதம் தான் என்பதை பகிரங்கமாக ஒரு ஊடகத்தின் வாயிலாக ஏற்றுக்கொண்டுள்ளார். முதலில் அவர் இந்த உண்மையை இவ்வாறு ஏற்றுக்கொண்டமைக்கு பாராட்டு தெரிவிக்க விரும்புகின்றேன்.




1980க்கு முன்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ் முஸ்லீம் மக்கள் மிக ஒற்றுமையுடனே வாழ்ந்து வந்தார்கள்.1980 பின்னர் தமிழ் ஆயுதக்குழுக்கள் முஸ்லீம்கள் மீது ஆயுதங்களினால் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தன.இதனால் அவர்கள் மீது முஸ்லீம்களுக்கு பயம் ஏற்பட்டிருந்தது.இந்த பயத்தினை போக்குவதற்காக தான் முஸ்லீம் தரப்பிலும் ஆயுதம் ஏந்தியிருந்தார்கள்.இதனை விட முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருந்தார்கள்.எனினும் வட மாகாணத்தில் 1 இலட்சத்திற்கும் அதிகமான முஸ்லீம் மக்கள் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட கொடுமைகளையும் கண்டோம்.

ஆகவே கலையரசன் கூறுவதை போன்று ஆயுதம் தாங்கிய போராளிகள் மேற்கொண்ட செயற்பாடு காரணமாக தான் முஸ்லீம் தமிழ் மக்களுக்கு இடையே பிளவு ஏற்பட்டது என்பதை தெளிவு படுத்துகின்றார். எனவே இந்த நேரத்தில் அவர் குறித்த உண்மையை கூறியதற்காக பாராட்டுகின்றோம்.எங்களை பொறுத்தவரை தமிழ் முஸ்லீம் ஒற்றுமையினையை விரும்புகின்றோம் என குறிப்பிட்டார்.

## திருக்கோவில் பிரதேசத்தில் கடுமையான வீதி சோதனைகள் முன்னெடுப்பு



(திருக்கோவில் நிருபர்)

அம்பாரை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருக்கோவில் பிரதேசத்தில் அரசின் பயணக்கட்டுப்பாட்டு விதிமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் திருக்கோவில் பிரதேசத்தில் வீதி சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

இவ் வீதி சோதனைகள் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் மற்றும் திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சீஜ.பி.திலகரெத்தின ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய திங்கட்கிழமை (14) இடம்பெற்று இருந்தன.

இதன்போது பிரதான வீதிகளில் பயணம் செய்த வானங்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரது பயண அனுமதி பத்திரங்கள் பரிசோதிக்கப்பட்டு இருந்ததுடன் முககவசங்கள் முறையாக அணியாத நபர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு எச்சரிக்கை செய்து அனுப்பி வைக்கப்பட்டு இருந்தனர்.

திருக்கோவில் பிரதேசத்தில் தொடர்ந்தம் வீதிகளில் தேவையற்ற முறையில் நடமாடுபவர்கள் முறையாக பயண அனுமதிகள் பெற்றுக் கொள்ளாத நபர்கள் மீது எதிர்வரும் நாட்டகளில் பொலிசாரின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தெரிவித்து இருந்தார். இவ் வீதி சோதனையில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் திருக்கோவில் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் திருக்கோவில் பிரதேச செயலக கொவிட் 19 கட்டுப்பாட்டு செயலணிக் குழு உத்தியோகத்தர்கள் ஆகியோர் மேற்படி வீதிச் சோதனைகளை முன்னெடுத்து இருந்துடன் இவ் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசி வழங்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தி தடுப்பூசி போட்டுக் கொள்வதே பாதுகாப்பானது

### டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிசாட்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தடுப்பூசி வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சாய்ந்தமருதில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றதும் அவை பொது மக்களுக்கு உடனடியாக வழங்கப்;படும். எனவே, தடுப்பூசி போட்டுக் கொள்வதே அனைவருக்கும் பாதுகாப்பானது என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்; எம்.எம்.அல் அமீன் றிசாட் தெரிவித்தார்.

தடுப்பூசி வழங்குவது குறித்து நேற்று மாலை விளக்கமளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவிக்கையில், எந்த நேரத்திலும் தடுப்பூசி வழங்குவதற்கு ஆயத்தமாக அதற்கான வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, தடுப்பூசி வழங்குவதற்கான இறுதி கட்டத்திலே இருக்கிறோம். முதற்கட்டமாக 60 வயதுக்கு மேற்பட்ட கொரோனா தாக்கம் காணப்படும் கிராமசேவகர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்களுடைய கிராமசேவகர் பிரிவுகளில் முன்கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறும்; கோரப்பட்டுள்ளனர்.

அத்தோடு, பொதுமக்களோடு நேரடியாக நெருங்கிய தொடர்பில் உள்ள அரச உத்தியோகத்தர்களான கிராம சேவை உத்தியோக த்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், வங்கிகளில் வேலைசெய்வோர், மின்சார சபை, நீர் வழங்கல் அதிகார சபையில் வேலைசெய்வோர் போன்ற மக்களுடன் நெருங்கிய தொடர்பில் உள்ளோர், அந்தப் பகுதியில் உள்ள ஆமி, நேவி, பொலிஸ் போன்ற பாதுகாப்பு தரப்பில் உள்ளோருக்கும் முதல் கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு யாரும் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது. தடுப்பூசிகள் மூலமாக பக்க விளைவுகள்



ஏற்பட்டதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. உதாரணத்திற்கு நாம் காய்ச்சலுக்காகப் பாவிக்கும் பரசிடமோலிலும் ஆயிரம் பக்கவிளைவுகள் உள்ளன. அதனுடைய பக்கவிளைவுகளை எடுத்தப் பார்த்தோமானால்; நாம் யாரும் பரசிடமோலைக் கூட பாவிக்க முடியாது.

எனவே, அனைத்து மக்களும் தடுப்பூசியை எடுத்துக் கொண்டால்த்தான் நோயின் தாக்கத்திலிருந்து அனைவரும் பாதுகாத்துக் கொள்ளலாம். நாட்டில் 80 சதவீதமான மக்களுக்கு தடுப்பூசிகள்; வழங்கப்படுமாக இருந்தால் ஏனைய நாடுகள் போன்று எமது நாட்டிலும் சாதாரணமாக வாழலாம். அமெரிக்கா போன்ற நாடுகளில் அநேகமான மக்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் அங்கு முகக் கவசங்கள் கூட அணியாது அங்குள்ள மக்கள் சாதாரணமாக உலாவுகின்றனர், வாழ்கின்றனர்.

கர்ப்பிணித் தாய்மாரும் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். அவர்களும் பயப்படத் தேவையில்லை. கர்ப்பிணித் தாய்மார்களில் முதல் 3 மாதங்கள் கழித்தவர்கள் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம்.

கர்ப்பிணித் தாய்மார்களில் சீனி, பிரஸர் போன்ற தொற்றா நோய் உள்ளவர்கள் தடுப்பூசி கட்டாயம் போட்டுக் கொள்வதன் ஊடாக அவர்களது குழந்தைக்கும் தாய்க்கும் பாதுகாப்பாக இருக்கும்.

தடுப்பூசி சம்பந்தமாக சமூக ஊடகங்கள், வட்ஸ்அப் மூலமாக உலாவரும் வதந்தியான, போலிச் செய்திகளை யாரும் நம்ப வேண்டாம். அது ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடையாது என்றும் தெரிவித்தார்.

## அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா கல்லூரியில் அதிபராக டேவிட் அமிர்தலிங்கம் பொறுப்பேற்பு

(வி.சுகிர்தகுமார்)



அக்கரைப்பற்று கமு /திகோ/ஸ்ரீ/ இராமகிருஷ்ணா கல்லூரியில் தேசிய பாடசாலையின் தரம் 1அதிபராக திரு.ஜே.ஆர்.டேவிட் அமிர்தலிங்கம் மாகாண பாடசாலையில் இருந்து தேசிய பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அதே வலயத்தில் உள்ள அக்கரைப்பற்று கமு/திகோ/ஸ்ரீ/ இராமகிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலையில் அதிபராக தனது கடமையினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.யோ.ஜெயச்சந்திரன் முன்னிலையில் அதிபர் பதவியினை பொறுப்பேற்றுக்கொண்டார்.இதுவரைகாலமும் கடமையாற்றிய திரு.அ.சுமன் அவர்கள் புதிய அதிபரிடம் கடமையை கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆலையடிவேம்பில் 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உலர் உணவுப்பொதிகள்





(வி.சுகிர்தகுமார்)

கொவிட் 19 மூன்றாம் அலை காரணத்தினால் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 70 வயதிற்கு மேற்பட்ட பொது நலன் உதவி பெறும் வருமானம் குறைந்த முதியோர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப் பட்டன.

புலம்பெயர் உறவுகள் மற்றும் உள்ளூர் உறவுகள் அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களின் நிதியீட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களே இன்று ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினரின் உதவியுடன் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட 1600 ரூபா பெறுமதியான 250 பொதிகள் பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டதுடன் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய கிராமங்கள் ரீதியாக பாதிக்கப்பட்டு;ள்ள முதியவர்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்டன.

இந் நிலையில் நிவாரணப் பொருட்களை பிரதேச செயலாளர் வி.பபாகரன் மற்றும் அம்பாரை மாவட்ட சிவில்; சமூக அமைப்புக்களின் கொவிட் தடுப்பு செயலணி இணைப்பாளர் வி.பரமசிங்கம் ஆகியோர் பார்வையிட்டதுடன் பணியில் ஈடுபடுகின்றவர்களுக்கு ஆலோசனையும் வழங்கினார்.

மேலும் சுகாதார நடைமுறைகளுடன் நிவாரணம் வழங்கப்படவேண்டும் எனவும் கண்டிப்பான உத்தரவை பிறப்பித்தார்.

முற்றிலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற நிவாரணம் வழங்கும் பணியில் ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டதுடன் பொதுமக்களின் வீடுகளுக்கு கொண்டு சென்றும் கையளித்தனர்.

இதேநேரம் தொடர்ந்தும் இப்பணி முன்னெடுக்கப்படும் நிலையில் பயணத்தடை காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதிகளவான மக்கள் நிவாரணத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாழைச்சேனையில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நிறைவடைந்தது



(க.ருத்திரன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் சினோபாம் கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலையுடன் நிறைவுற்றது.

தங்களுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை அடிப்படையில் 1337 பேருக்கு பிரதேசத்தில் முன்னுரிமையளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இவை செலுத்தப்பட்டன.

இவ் நடவடிக்கையில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சினோபாம் கொவிட் தடுப்பூசியினை பெற்றுக் கொண்டவர்களுக்கு எதுவிதமான பக்க விளைவுகளும் ஏற்படவில்லையென்றும் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லையென சுகாதார வைத்திய அதிகாரி வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜ முதலி ஸ்டீவ் சஞ்சீவ் தெரிவித்தார்.

கொவிட் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதும் மீண்டும் முன்னுரிமை அடிப்படையில் செலுத்தப்படவுள்ளதாகவும் தங்களுக்கு தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவில்லையென மக்கள் குழப்பமடைய தேவையில்லையென அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு 250000 தடுப்பு ஊசிகள் முதற் கட்டமாக கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் கடந்த 08.06.2021 ஆம் திகதி மாவட்டத்தில் பல்வேறு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## களுவாஞ்சிகுடியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் படுகாயம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு,கல்முனை பிரதான வீதியில் திங்கட்கிழமை (14) இடம் பெற்ற விபத்து சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

கல்முனை பக்கமிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி ஒன்று வீதியைக் குறுக்கீடு செய்ய முற்பட்டபோது இவ்விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மருதமுனையைச் சேர்ந்த 19 வயதுடைய அப்துல் ஹமீட் றாசிக் என்பவர் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.